DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.374/2022**

Deposition of Witness

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திரு.C.M. சரவணன், B.A., L.L.M., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

பெயர் - திருமதி.சி.வி.ஜெயதேவி **PW-6** வயது

த/க பெயர் தொழில்

கிராமம் தாலூக்கா

மாவட்டம்

<u>முதல் விசாரணை:</u>-

1) நான் தற்போது பெங்களூரில் வசித்து வருகிறேன். நான் கையெழுத்து மற்றும் கைரேகை நிபுணராக உள்ளேன். நான் 45 வருடங்களாக மேற்படி தொழிலில் ஆய்வு செய்து வருகிறேன். நான் B.Sc., Honors, L.L.B., படித்துள்ளேன். எனது தந்தை வீரப்பா என்பவர் வழக்கறிஞராகவும், கையெழுத்து மற்றும் கைரேகை நிபுணராகவும் இருந்தார். அவர் 1975ம் வருடம் இறந்துவிட்டார். அவர் சுமார் 60 வருடங்களாக கையெழுத்து கைரேகை நிபுணராக இருந்தார். எனது தகப்பனாரிடம் நான் 3 வருடங்கள் பயிற்சி பெற்றேன். அவருடன் 3 வருடங்கள் பணிசெய்தேன். 1975லிருந்து தனியாக நிபுணர் தொழில் செய்து வருகிறேன்.

2) கைரேகை மற்றும் கையெழுத்து நிபுணத்துவம் குறித்து நான் தனியாக படித்துப் பட்டம் எதுவும் பெறவில்லை. எனது தந்தையிடமிருந்து பயிற்சி பெற்றேன். மேற்படி நிபுணத்துவம் பெறுவதற்கு தனியாக தகுதிகள் எதுவும் நிர்ணயம்

செய்யப்படவில்லை. எனக்கு தென்இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு நீதிமன்றங்களிலிருந்து கையெழுத்து மற்றும் கைரேகை ஆய்வு அறிக்கைகள் கேட்டு கோப்புகள் அனுப்பிக் கொண்டிருந்தனர். கர்நாடகா காவல் துறைக்கு எனது நிபுணத்துவத்தின் அடிப்படையில் பல்வேறு அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளேன். மாண்புமிகு கர்நாடக உயர்நீதிமன்றம் பல்வேறு வழக்குகளில் என்னை அறிக்கைகள் சமர்ப்பிக்கச் சொல்லி அறிவுறுத்தியுள்ளது. நானும் அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளேன். 1975 ம் வருடத்திலிருந்து மேற்படி கைரேகை மற்றும் கையெழுத்து சம்பந்தமாக சுமார் 12000 ம் ஆய்வு அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளேன். கடந்த 1975 ம் வருடத்திலிருந்து கைரேகை மற்றும் கையெழுத்து துறையில் பயிற்சி பெற்றிருப்பதால் எனக்கு நிபுணத்துவம் உள்ளது.

3) நீதிமன்றத்திலிருந்து இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்துள்ளது. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.4 ன் அசல் என்னால் பவானி, இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி நீதிமன்றத்திலிருந்து வழங்கப்பட்ட சான்றிட்ட நகல் ஆகும். கடந்த 2004 ம் வருடம் பவானி, இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரில் 19.10.2004 ம் தேதியன்று மேற்படி நீதிமன்றத்திற்கு சென்று, ஒரு பாகப்பிரிவினை பத்திரம் மற்றும் 08.01.2004 ம் தேதியிட்ட ஒரு பதிவு செய்யப்பட்ட பத்திரத்தை பார்வையிட்டு, பாகப்பிரிவினை பத்திரத்தில் இருந்த ஒப்பக்கொள்ளப்பட்ட கைரேகையை ஆய்வு செய்து, புகைப்படம் எடுத்தேன். அதை என்னுடைய ஆய்விற்காக **'A1'** எனக் குறிப்பிட்டுள்ளேன். 08.01.2004 ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணத்திலிருக்கும் கைரேகையை **'Q'** எனக் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி **'A1'** என்ற கைரேகை சின்னப்பகவுண்டர் என்பவருடையது ஆகும்.

4) பிரச்சனைக்குரிய கைரேகை **'Q'** ஆகும். மேற்படி இரண்டு கைரேகைகளையும் புகைப்படம் எடுத்து, பெரிதாக்கி ஆய்வு செய்தேன். மேலும் குருசாமிக்கவுண்டர் என்பவரது கைரேகை ஒன்றை, மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்திலிருந்து எடுத்து ஆய்வு செய்தேன். அதை **'A2'** எனக்குறிப்பிட்டேன். **'A1'** கைரேகை **'Q'** உடன் ஒப்பிட்டு ஆய்வு செய்தேன். அது ஒரே நபருடையது என முடிவு செய்தேன். **'A2'** கைரேகை **'Q'** உடன் ஒப்பிட்டு ஆய்வு செய்தேன். அது இரண்டும் ஒரே நபருடையது அல்ல என முடிவு செய்து,

எனது ஆய்வு அறிக்கையை பவானி, இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். எனது அறிக்கையுடன் கைரேகைகள் பெரிதாக்கப்பட்ட புகைப்படங்களையும், நகல்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். என்னிடம் காட்டப்படும் கைரேகையின் சான்றிட்ட நகல்கள், என்னால் பவானி, இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதாகும். அது **அ.சா.ஆ.**8 ஆகும்(எதிரி தரப்பு வழக்கறிஞர், மேற்படி ஆவணம் தெளிவாக இல்லாததாலும், புகைப்பட நகல் என்பதாலும் நீதிமன்றத்தில் குறியீடு செய்ய முடியாது என்று ஆட்சேபனை செய்தார். மேற்படி ஆவணம் நீதிமன்றத்திலிருந்து வழங்கப்பட்ட சான்றிட்ட நகல் என்பதால் ஆட்சேபனை நிராகரிக்கப்படுகிறது). எனது அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பு, நான் பார்வையிட்ட ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள்தான் என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 மற்றும் 5 ஆகும். இந்த வழக்கு தொடர்பாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை. தற்போது சாட்சி தனக்கு ஞாபகம் இல்லை என்று சொல்கிறார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

5) பவானி இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்டதக கூறப்படும் அழைப்பாணை எதுவும் தற்போது இல்லை என்றால், சரிதான். இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையில் எனது அறிக்கை தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கொண்டு வந்து சாட்சியம் அளிக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி ஆவணங்களை நான் கொண்டு வந்துள்ளேனா என்றால், இல்லை. மேற்படி ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யத் தயாரக உள்ளேனா என்றால், தற்போது அவை எனது கைவசம் இல்லை. இந்திய அரசு Central Finger Print Bureau Manual ஒன்றை வெளியிட்டுள்ளது என்றாலும், அதன்படி கைரேகை மற்றும் கையெழுத்து நிபுணராக யார், யார் இருக்க முடியும், அதற்கான தகுதிகள் குறித்து குறிப்பிட்டுள்ளது என்று சொன்னால், அது குறித்து எனக்குத் தெரியாது.

**<u>(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர், சாட்சியின் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க வேண்டி மனு தாக்கல் செய்ததன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)</u>**